ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 14,876/1—1969 ඔක්තෝබර් 19 වැනි ඉරිදා—1969.10.19

14,876/1 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ம் ஆண்டின் 1 ம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

1969 ம் ஆண்டின் 1 ம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3) ஆம், 14 ஆம், 20 ஆம் பிரிவுகளின் கீழ் இரசாங்க அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

ஜே. ஆர். ஜெயவர்த்தன,
இராசாங்க அமைச்சர்.

கொழும்பு, 15.10.1969.

**ஒழுங்குவிதி**

1. 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ந் திகதியையும் 14,866–2 இலக்கத்தையும் கொண்ட அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1969 ம் ஆண்டின் இறக்குமதி அனுமதிச் சீட்டாக்கல் (விசேட ஏற்பாடு) ஒழுங்குவிதிகள், அவற்றின் 1 ம் பந்தியில் " திணைக்களம் " என்ற வாக்கியத்துக்காக " கட்டுப்பாட்டதிகாரி " என்ற வாக்கியத்தைச் சேர்ப்பதன் மூலம் இதனால் திருத்தப்படுகின்றன.

2. 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ந் திகதியையும் 14,866–2 இலக்கத்தையும் கொண்ட அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1969 ம் ஆண்டின் இறக்குமதி (விலக்களித்தல்) ஒழுங்குவிதிகள் அவற்றின் 2 ம் ஒழுங்குவிதியில் பந்தி (3) க்காக கீழ்காணும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

" (3) (அ) வியாபார பங்கின உத்தரவுச் சீட்டுக்களின் கீழ் அல்லது வரையருப் பொது உத்தரவுச் சீட்டுக்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாதிரிப் பொருட்களாகவும்,

(ஆ) ஏதாவது ஒரு அனுப்புச் சரக்கு, மருந்துச் சரக்குகளின் வியாபாரமாதிரிப் பொருட்கள் தவிர வி. கா. கே. பெறுமதி ரூபா 1000க்கு மேற்படாத வியாபார மாதிரிப் பொருட்களாகவும்,

(இ) அத்தகைய வியாபார மாதிரிப் பொருட்கள் வியாபாரத் தொகையிலோ அல்லது விற்பனைக்காகவோ இறக்குமதி செய்யப்படாமலும்

இருந்தால், உள்நாட்டு முகவர்களுக்கு வெளிநாட்டு வியாபாரத் தாபனங்களால் இனமாக அனுப்பப்படும் வியாபாரமாதிரிப் பொருட்கள். "

10–902

---

## அரசாங்க பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**21/69 ம் இலக்க இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்**

**20/69 ம் இலக்க இறக்குமதிக் கட்டுப்பாட்டறிவித்தலுக்குத் திருத்தம்**

**தனியுரிமை மருந்துச் சரக்குகளின் இறக்குமதி**

14,874–3 ம் இலக்கத்தையும் 5.10.69 ம் திகதியையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டறிவித்தல் இலக்கம் 20–69 ல் உள்ள 4 ம் இலக்கப் பட்டியனுடன் சேர்ப்புக்களில் எச். ஆர். நாப் லிமிட் என்ற தயாரிப்பாளரின் கீழ் காணப்படும் " பி. சி.எம். வில்லைகள் " என்ற இனம் நீக்கப்படுவதால் திருத்தப்படுகின்றன என்பதை இத்தால் இறக்குமதியாளர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன.

வி. ஜே. எச். குணசேகர,
இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு, 19 அக்ரோபர் 1969.

10–901

## சுங்க அறிவித்தல் இல. 61/9/412

(250 ஆம் அத்தியாயமான) அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டதும் 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதிய 12,781 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 14.3.1962 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையின்படி 1969.10.20 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும்.

சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்துமூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் இத்தீர்வை மேலதிகமானதாக இருக்கும்.

| இறப்பர் | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு இறுத்தல் ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி .. .. .. .. | 1 39 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இறுத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை .. .. .. .. | 0 26 |

எனது இல. எ. 781,
மா. ம. சுங்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 19 ந் உ.

எ. ஈ. பண்டிதரத்ன,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

10–82

---

## சுங்க அறிவித்தல் இல. 67/3/100

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1967 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ஆம் தேதிய 14,775/17 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968.2.22 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்கென இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பறாவுக்கான மதிப்பீட்டு கொ.கா.கே. விலை 1969.10.20 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்துக்கு, ரூபா 1,229.77 ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

2. கொப்பறா, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பறாவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காய்த் துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு 1,000 தேங்காய்க்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 369 94 .. | 414 29 .. | 351 82 .. | 92 49 |

3. சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம் பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

எனது இல. 744/22, மா. ம. சுங்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 19 ந் உ.

எ. ஈ பண்டிதரத்ன,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

10–82

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.